# படகில் மாற்றப்பட்ட 5,711 கிலோ மஞ்சள்

## இந்தியர்கள் உட்பட 6 பேர் கைது

கொழும்பு, நவ. 8

சட்டவிரோதமான முறையில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தப்பட்ட 5 ஆயிரத்து 711 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் கட்டி மூடைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கற்பிட்டி குதிரைமலை கடற்கரைப் பகுதியில் இந்தியத் தாவ் படகு மூலமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட குறித்த மஞ்சள் கட்டிகள் அடங்கிய மூடைகளை இரண்டு மீன்பிடிப் படகில் ஏற்றிக்கொண்டிருந்தபோது கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது மீன்பிடிப் படகில் இருந்த இலங்கைப் பிரஜைகள் இருவரும், இந்திய தாவ் படகில் இருந்த நால்வரும் இந்தியப் பிரஜைகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களிடமிருந்து 3 ஆயிரத்து 218 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து கற்பிட்டி பகுதியில் உரைப் பைகளில் பொதி செய்யயப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த மேலும் 2 ஆயிரத்து 493 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் என்பனவும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள், பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட இரண்டு மீன்பிடி படகுகள் மற்றும் உலர்ந்த மஞ்சள் கட்டிகள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ந-இ)

## கொரோனா, டெங்கு இரண்டும் உள்ள நோயாளி அவதானிப்பு

கொழும்பு, நவ. 8

நாட்டில் டெங்கு மற்றும் கொரோனா இரண்டும் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்ட முதல் நோயாளி நீர்கொழும்பு மருத்துவமனையில் அடையாளம் காணப்பட்டுள்ளார். 29 வயதுடைய ஒருவரே இவ்வாறு இரட்டைநோய் தொற்றுக்கு உட்பட்டுள்ளார்.

இவ்வாறு நோய்த் தொற்றுக்குள்ளானர் 29 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த நபர் மீன் சந்தை ஒன்றிம் மூலம் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார். அவர் டெங்குத் தொற்றில் இருந்து ஓரளவு பாதுகாப்பாக நிலையில் உள்ளார். தீவிரமாகத் தற்போது கண்காணிக்கப்படுகின்றார். (ம-இ)

## கொரோனா சிகிச்சைக்கு புதிய நிலையம் திறப்பு

கொழும்பு, நவ. 8

கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக புனானியில் உள்ள சிறப்புச் சிகிச்சையளிப்பு மருத்துவமனைக்கு அனைத்து வசதிகளுடனும் கூடிய புதிய கட்டடத் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் ஒரே நேரத்தில் 2 ஆயிரத்து 200 பேர் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் எதிர்காலத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமாயின் இந்த கட்டடத் தொகுதியைப் பயன்படுத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-இ)



## நீர்க் கட்டணம் செலுத்த கால அவகாசம்

கொழும்பு, நவ. 8

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக, தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ளவர்களுக்கு நீர்க் கட்டணங்களைச் செலுத்துவதற்காக சலுகைக் காலம் வழங்கப்படும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மேலும், நீர் கட்டணங்களைச் செலுத்த முடியாத, குறித்த பகுதிகளில் உள்ள நீர்ப் பாவனையாளர்கள் கட்டணத்தைச் செலுத்த முடிந்த தினத்தில் செலுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

## ஒரு மீற்றரைக் தாண்டியது கொரோனா இடைவெளி

கொழும்பு, நவ.8

கொரோனா வைரஸின் வீரியம் அதிகரித்துள்ளதன் அடிப்படையில் சமூக இடைவெளியை ஒரு மீற்றருக்கு மேல் கடைபிடிக்க வேண்டும் என சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஒன்றரை அல்லது இரண்டு மீற்றர் சமூக இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டும் எனவும் இந்த நோயை கட்டுப்படுத்துவது மக்களின் நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

## கடலில் தீப்பற்றிய படகு: மீட்டனர் கடற்படையினர்

கொழும்பு, நவ. 8

ஹம்பலாங்கொடை பகுதியில் படகொன்று தீப்பற்றியதை அடுத்து இலங்கைக் கடற்படையினர் அதை மீட்டுக் கரைசேர்த்துள்ளனர்.

மீன் பிடிப்பதற்காகச் சென்ற படகே இவ்வாறு தீப்பற்றியது. படகு மீட்கப்பட்டு காலி துறைமுகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (ம-இ)

## ஊரடங்கு தளத்தப்பட்டாலும் அரச நிறுவனங்களில் கட்டுப்பாடு தொடரும்!

கொழும்பு, நவ. 8

ஊரடங்கு உத்தரவு நாளையதினம் தளர்த்தப்பட்டாலும் அரச நிறுவனங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாத்திரமே பணியாளர்களை இணைத்துக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் நாளையதினம் ஊரங்கு தளர்த்தப்படுகின்றது. இந்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது. (ம-9)

## ஊரடங்கு மீறல்: 150 பேர் கைது

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரப் பகுதியில் 150 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது 22 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இது வரை 2 ஆயிரத்து 832 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 425 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

### கொரோனா இரண்டாவது அலை

# மாரடைப்பால் இறப்பு ஏற்படுவது குருதியில் கட்டிகள் உருவாகுவதே!

கொழும்பு, நவ. 8

இலங்கையில் பரவும் கொரோனா இரண்டாவது அலையில் ஏற்படும் மரணங்களில், மாரடைப்பினால் அதிக மரணங்கள் நிகழ்வதற்கு குருதியில் கட்டிகள் உருவாகுவதே காரணம் என தெரிவித்துள்ளார் கொரோனா நோயாளர்கள் சிகிச்சை பெறும் ஹோமாகம ஆதார மருத்துவமனையில் மருத்துவ ஆலோசகர் மருத்துவர் எரங்க நாரங்கொட.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனா பெருந்தொற்றின் முதல் அலையில் மாரடைப்பால் கொரோனா நோயாளிகள் இறக்கவில்லை.

ஆனால் இந்த இரண்டாவது அலையில் கொரோனா நோயாளர்கள் மாரடைப்பால் இறப்பது அதிகரித்துள்ளது. நாளங்கள் மற்றும் நரம்புகளில் உருவாகும் கட்டிகளே இவ்வாறு மாரடைப்பை ஏற்படுத்துகின்றன - என்றார். (ம-இ)

